# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8066094

1. District மாவட்டம் : Coimbatore dist. PS: காவல்நிலையம் Vigilance and Anti corruption Year: ஆண்டு 2019 FIR No.: மு.த.அ. எண் 14/2019/AC/CB. Date: நாள் 05.10.2019 at 1900 hrs.

2. (i) Act சட்டம்: The prevention of corruption Act 1988 as amended by the prevention of corruption (Amendment) Act 2018. Sections பிரிவுகள்: 7(a), 7(A)
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 102 Crpc.
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் 04.10.2019 Date to : நாள் வரை 05.10.2019
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 1830 hrs. Time to : நேரம் வரை 0500 hrs.
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 05.10.2019 Time நேரம் 1900 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 05.10.2019 VOL III Time நேரம் : 1900 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Tamil typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 4 km North East.
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Coimbatore north Regional Transport office. Thudialur.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. P. Duraisamy. (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் P. Pachaiyappan.
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் District Inspection cell officer. (g) Address : முகவரி District Inspection cell officer, Collectorate. Coimbatore.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1. Tr. Sivakumar MVI. 2) Tr. Kanagaraj MVI, 3) Tr. Hari Ramachandran 4) Tr. Anandan. J.A. 5) Tr. Radha krishnan. O.A. of Coimbatore North RTO. BROKERS: 6) Jayapal 7) Palanisamy 8) Ramkumar 9) Nawaz Khan 10) Kannan 11) Raja 12) Ravikumar 13) Vivek 14) Karthikeyan 15) Dhandapani 16) Padmanaban 17) Prabu 18) Ravi 19) Babu 20) S. Ravi 21) Ganesan 22) Shanmuga Sundaram. 23) Devarajan & 24. Paramasivam.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் No delay.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate sheet enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................... on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
05/10/2019

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
05/10/2019.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
05.10.2019.

Name: பெயர் J. Prabhudass.
Rank: நிலை Inspector of police, No. எண்
VE&AC, Coimbatore.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

Contents of FIR in Cr.No.19/2019/AC/CB u/s 7(a), 7(A) of PC Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 and 102 Cr.P.C.

இன்று 05.10.2019 மாலை 05.00 மணிக்கு கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் ஜீ.பிரபுதாஸ் ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திரு.P.துரைசாமி, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கோயம்புத்தூர் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 19/2019/AC/CB u/s 7(a), 7(A) of PC Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 and 102 Cr.P.C. ஆக வழக்கு பதிவு செய்தேன். புகாரின் விவரம் பின்வருமாறு அனுப்புநர் திரு.P.துரைசாமி, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கோயம்புத்தூர். பெறுநர் காவல் ஆய்வாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கோயமுத்தூர் ந.க.எண்.-341/2019/ஐ1 நாள் 05.10.2019 அய்யா, பொருள்- திடீர் தணிக்கை கோயம்புத்தூர் துடியலூர் வடக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது - நடவடிக்கை குறிப்புடன் புகார் மனு மேல்நடவடிக்கைக்காக அனுப்புதல் - சம்பந்தமாக, கோயம்புத்தூர் துடியலூர் வடக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் உள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலர், மோட்டார் வாகன ஆய்வாளர்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு வரும் பொதுமக்கள் தங்களது வாகன ஓட்டுனர் பழகுநர் உரிமம், ஓட்டுனர் உரிமம், புதிய வாகனப் பதிவு, தகுதிச்சான்று, அடமான ரத்து மற்றும் பெயர் மாற்றம் போன்றவற்றுக்கு பொதுமக்களிடமிருந்து நேரடியாகவும் மற்றும் ஓட்டுனர் பயிற்சிப்பள்ளி உரிமையாளர்கள், பணியாளர்கள், இடைதரகர்கள் மூலம் மாமூலாக கையூட்டு பெறுவதாகவும் கிடைத்த நம்பகமான தகவலின் அடிப்படையில் நானும், கோயம்புத்தூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, காவல்

ஆய்வாளர்கள் திரு.J.பிரபுதாஸ் மற்றும் திருமதி.M.விஜயலட்சுமி மற்றும் குழுவினர்கள் ஆகியோர்களுடன் இணைந்து 04.10.2019 தேதி மாலை 0630 மணிமுதல் 05.10.2019ஆம் தேதி காலை 0500 வரை திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி அலுவலத்தில் திடீர் தணிக்கை மேற்கொண்டபோது அலுவலகத்தில் பணியில் இருந்தவர்களிடம் எங்களை அறிமுகம் செய்து கொண்டு திடீர் தணிக்கைக்கு வந்த விபரத்தை தெரிவிக்கப்பட்டது. வட்டாரப் போக்குவரத்து அலுவலர் திரு.கே.குமரவேல் அவர்களுக்கு தகவல் சொன்னதின்பேரில், இரவு 09.45 மணிக்கு ஆஜராகி நடவடிக்கையில் கலந்துகொண்டார், வட்டார போக்குவரத்து அலுவலகமானது, இரண்டு தளங்களுடன் இயங்கி வருகிறது. தரைத்தளத்தில் பணியாளர்கள் மற்றும் இடைத்தரகர்கள், பார்வையாளர்கள் அமரும் அறையில் அமர்ந்திருந்தார்கள். முதல் தளத்தில் 6-அலுவலகப் பணியாளர்கள் இருந்தார்கள் அவர்களையும் அவர்களது இருக்கையை சுற்றிலும் சோதனை செய்ய ஆவணங்கள் மட்டும் இருந்தது. அவர்கள் முறையே (1) பதிவறையில் தினக்கூலி அடிப்படையில் வேலை பார்த்துவரும் திரு.பரமேஷ்குமார் என்பவரை விசாரிக்க கடந்த 01.07.2018 முதல் வேலைப்பார்த்து வருவதாகவும் அதற்கான கூலி ரூ.250/- பதிவறை எழுத்தர்/இளநிலை உதவியாளர் திரு.கண்ணன் அவர்களிடமிருந்து பெற்றுவருவதாக தெரிவித்தார். (2) அ2-இருக்கையில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவரது பெயர் திரு.பன்னீர் செல்வம் என்றும், பணியமைப்பு தொடர்பான மற்றும் பேருந்து தொடர்பான பணியையும் பார்ப்பதாக சொன்னார். (3) திரு.சந்திரமுரளி என்பவரை விசாரிக்க அவர் மேற்படி அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக கடந்த 8 மாதங்களாக பணிபுரிந்து வருவதாக சொன்னார். (4) தேசிய அனுமதி சரக்கு வாகனம் தொடர்பான பணிகள் பார்க்கும் ஆ2 இருக்கையில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க திரு.கார்த்திக் என்றும், அவர் கடந்த 23.09.2019-ம் தேதி முதல் உதவியாளராக பணிபுரிந்து வருவதாக சொன்னார் (5) திரு.கண்ணன் என்பவரை விசாரிக்க, அவர் கடந்த 04.03.2019-ம் தேதி முதல் இளநிலை உதவியாளராக பதிவறை எழுத்தர் பணியை பார்த்து வருவதாக சொன்னார். (6) இதற்கிடையில் 04.10.2019 அன்று இரவு சுமார் 7.15 மணிக்கு வந்த நபரை

விசாரிக்க தான் ராணுவத்தில் ஓட்டுனராக 17 வருடமாக பணிபுரிந்து ஓய்வு பெற்றதாகவும், தான் தற்போது Texco Ltd., மூலம் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் அவர்களின் வாகனத்தை கடந்த டிசம்பர் 2012-ம் ஆண்டு முதல் ஓட்டிவருவதாக தெரிவித்தார். மேலும் அவர்களிடமிருந்த பணம் சொந்த பணம் என்பதால் அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் முதல் தளத்தில் புரோக்கர்கள் மற்றும் ஏஜெண்டுகள் என்று சொல்லியிருந்த 10-பேரையும் விசாரிக்கப்பட்டது. அவர்கள் விசாரணையின்போது வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வேலைக்கான தகுந்த முகாந்திரங்கள் காட்டாமலும், அவர்களிடமிருந்த பணத்திற்கு சரியான காரணம் காட்டாமலும், அவர்கள் வைத்திருந்த ஆவணங்கள் மூலம் அவர்கள் புரோக்கர் தொழில் செய்துவருவதும், அவர்களிடமிருந்த பணம் மூலம் அதிகாரிகளிடம் செல்வாக்குப் பெற்று தங்களது பணிகளை முடித்துக்கொள்வது தெரியவருகிறது. அங்கிருந்த (1) திரு.ஜெயபால் என்பவரிடமிருந்து ரூ.850/- மற்றும் அவர் சிறுநீர் கழிப்பதற்காக சென்ற இடத்தில் கீழே போட்ட ரூ.6,590/- கேட்பாரற்று கிடந்ததால், மேற்படி பணம் கைபற்றப்பட்டது. வட்டார போக்குவரத்து அலுவலர் இல்லாத நிலையில் அவரது டேபிளின் முன் கிடந்த ரூ.700/- கைபற்றப்பட்டது. (2) திரு.பழனிச்சாமி என்பவரை விசாரிக்க, தான் தற்காலிக அனுமதி சீட்டுகள் பெறுவதற்காக வருபவர் என்று தெரிவித்ததால், அவர் வைத்திருந்த ரூ.7420/-யையும், தற்காலிக அனுமதி சீட்டுகள் அலுவலக நகல்கள் முறையே 1) TN 66 T 2599, 2) TN 63 AU 1999, 3) TN 40 E 3535, 4) TN 21 AF 3949. 5) TN 66 C 9459 ஆகியவையும் கைப்பற்றப்பட்டது. (3) திரு.ராம்குமார் என்பவரை விசாரிக்க தான் மேட்டுப்பாளையம் ரோடு, வடகோவையில் உள்ள சுந்தரம் மோட்டார்ஸில் பணி புரிவதாகவும், அவரிடமிருந்து புதிய பதிவு செய்வதற்காக ஆவணங்கள் 1) Honda Amaze Car Chasis no. MAKDF55EGK4106489 மற்றும் 2)Honda JAZZ Car Chasis no.MAKGK78KGK4200520 ஆகிய இரண்டும், பணம் ரூ.2260/-யையும் கைப்பற்றப்பட்டது. (4) திரு.H.நவாஸ்கான் என்பவரை விசாரிக்க தான் கோயம்புத்தூர் கணபதியில் உள்ள சஞ்சய் மோட்டார்ஸ் நிறுவனத்தில் வேலை செய்வதாகவும், அவரிடமிருந்து பணம் ரூ.2,090/- மற்றும் அவர் வைத்திருந்த

bag-லிருந்து படிவம்-35 (HP Termination)க்காக தயார் செய்த விண்ணப்பங்களுடன் கீழ்கண்ட 4-வாகனங்களின் 1) TN 38 CQ 1662 (2) TN 38 CQ 0901 3) TN 38 CP 9122, 4) TN 38 CK 4754 அசல் RC-Book ஆகியவை RTO அலுவலகத்திற்கு கொடுப்பதற்காக வைக்கப்பட்டிருந்த ஆவணங்கள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் 1) TN 38 CF 1328 பதிவு எண் கொண்ட அசல் RC Book மற்றும் அதில் Tax Clearance-க்காக வைக்கப்பட்டிருந்த விண்ணப்பம், 2) TN 38 CC 8647 பதிவு எண் கொண்ட அசல் RC Book மற்றும் அதில் Form N.A.M.V(Notice of alternation to a Motor vehicle) -க்காக வைக்கப்பட்டிருந்த விண்ணப்பம், 3) TN 38 CC 8713 பதிவு எண் கொண்ட அசல் RC Book மற்றும் அதில் Form N.A.M.V(Notice of alternation to a Motor vehicle) -க்காக வைக்கப்பட்டிருந்த விண்ணப்பம், 4) TN 38 CD 1875 பதிவு எண் கொண்ட அசல் RC Book மற்றும் அதில் Form N.A.M.V(Notice of alternation to a Motor vehicle) -க்காக வைக்கப்பட்டிருந்த விண்ணப்பம், 5) TN 38 CC 8694 பதிவு எண் கொண்ட அசல் RC Book மற்றும் அதில் Form N.A.M.V(Notice of alternation to a Motor vehicle) -க்காக வைக்கப்பட்டிருந்த விண்ணப்பம், 6) TN 38 CC 8724 பதிவு எண் கொண்ட அசல் RC Book மற்றும் அதில் Form N.A.M.V(Notice of alternation to a Motor vehicle) -க்காக வைக்கப்பட்டிருந்த விண்ணப்பம், 6) TN 38 CC 8641 பதிவு எண் கொண்ட அசல் RC Book மற்றும் அதில் Form P.V.A (Permit variation application) -க்காக வைக்கப்பட்டிருந்த விண்ணப்பம், 7) TN 38 CD 1887 பதிவு எண் கொண்ட அசல் RC Book மற்றும் அதில் Form P.V.A (Permit variation application) -க்காக வைக்கப்பட்டிருந்த விண்ணப்பம், 8) TN 38 CA 9977 பதிவு எண் கொண்ட அசல் RC Book மற்றும் அதில் Form 35 and 29 (HP Termination and transfer of ownership) -

க்காக வைக்கப்பட்டிருந்த விண்ணப்பம், 9) TN 38 CF 2414 பதிவு எண் கொண்ட அசல் RC Book மற்றும் அதில் Form C.F.R.A (Application for renewal of certificate of fitness) -க்காக வைக்கப்பட்டிருந்த விண்ணப்பம், 10) TN 38 CR 4575 பதிவு எண் கொண்ட அசல் RC ( paper form) மற்றும் அதில் Form N.A.M.V(Notice of alternation to a Motor vehicle) -க்காக வைக்கப்பட்டிருந்த விண்ணப்பம் மற்றும் Smart cards 1) TN 38 CT 7897- Motor car, 2) TN 38 CT 8778- Motor cycle, 3) TN 38 CT 7911- Motor cycle, 4) TN 38 CT 8114- Motor cycle, 5) TN 38 CT 8241- Motor cycle, 6) TN 38 CT 8123- Motor cycle, 7) TN 38 CT 8246- Motor cycle, 8) TN 38 CT 8265- Three wheelers, 9) TN 38 CT 8395- Motor cycle,10) TN 38 CT 8202- Motor cycle, 11) TN 38 CT 8255- Motor cycle, 12) TN 38 CT 7972- Motor cycle,13) TN 38 CT 8002- Motor cycle, 14) TN 38 CT 7931- Motor cycle, 15) TN 38 CT 7947- Motor cycle, 16) TN 38 CT 7809- Three wheelers, 17) TN 38 CT 2554- Motor cycle, 18) TN 38 CT 7914- Motor cycle,19) TN 38 CT 7932- Motor cycle, 20) TN 38 CT 7961- Motor cycle, 21) TN 38 CT 7836- Motor car and 22) Driving license No.TN38 19990007741 of Tr.K.Manivanan- ஆகியன விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரது இரு சக்கர வாகனம் TN99 P 7576 Suzuki Access (Silver colour) வாகனத்தை அவர் மூலமாக சாவி கொண்டு உட்காரும் சீட்டினை திறந்து பார்த்தபோது இருந்த ரூ.61,075/- கைப்பற்றப்பட்டது, மேற்படி பணத்தை பற்றி கேட்க அந்த பணம் தனது பணம் தான் என்றும் தான் புதிய வாகனங்களின் பதிவிற்காக அரசு கட்டணங்களைத் தவிர்த்து மாமூலாக அந்த அலுவலகத்தில் பணிபுரியும் கண்காணிப்பாளர் திரு.ஹரிராமசந்திரன், மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சிவக்குமார் மற்றும் கனகராஜ் ஆகியோர்களுக்கு தனியாக கொடுப்பதற்காக வைத்திருந்த பணம் என்று

கூறினார். (5) திரு.கண்ணன் என்பவரை விசாரிக்க தான் கோயம்புத்தூர் நரசிம்மநாயக்கன்பாளையத்தில் உள்ள ஸ்ரீ முருகன் கார்ஸ் என்ற நிறுவனத்தில் வேலையில் இருப்பதாக சொன்னவரிடமிருந்த பணம் ரூ.2470/- கைப்பற்றப்பட்டது. (6) திரு.v.ராஜா என்பவரை விசாரிக்க, தான் லட்சுமி கார்கோ கம்பெனியில் field staff (RTO)-ஆக பணிபுரிந்து வருவதாக சொன்னவரிடமிருந்து பணம் ரூ.515/- கைப்பற்றப்பட்டது. (7) திரு.G.ரவிக்குமார் என்பவரை விசாரிக்க தான் இந்த RTO அலுவலகத்தில் கடந்த 7 வருடங்களாக புரோக்கராகப் பணிபுரிந்து வருவதாகவும், தான் HP Cancel, தகுதி சான்று புதுப்பித்தல் (FC) மற்றும் புதிய வாகனத்திற்கு வாகன பதிவு செய்து தருவது போன்ற பணிகளை வடக்கு RTO அலுவலகத்தில் மேற்கொண்டுவருவதாகவும், HP Cancel செய்வதற்கு வடக்கு RTO அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணியாற்றி வரும் திரு.ஹரிராமசந்திரன் என்பவருக்கு ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் ரூ.30/- கொடுத்தால்தான் மேற்படி வேலையை செய்து கொடுப்பார் என்றும், தகுதி சான்று புதுப்பித்தல் (FC) க்கு அவருக்கு ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் ரூ.300/- கொடுத்தால்தான் மேற்படி வேலையை செய்து கொடுப்பார் என்றும் சொன்னார். மேலும் அவரிடம் இருந்த பணம் ரூ.5,490/- கைப்பற்றப்பட்டது. மேலும் K.சசிக்குமார், என்பவரை விசாரிக்க தான் மேட்டுப்பாளையம் ரோடு புது பேருந்து நிறுத்தும் இடத்தில் உள்ள டி.வி.எஸ் லோட்டஸ் என்ற நிறுவனத்தில் வேலை பார்பதாகவும் அதற்குண்டான தகுந்த முகாந்திரம் காட்டியதால் அவரை அனுப்பி வைக்கப்பட்டது. (8) மேலும் அங்கிருந்த திரு.G.விவேக், என்பவரை விசாரிக்க தான் கோவை-சக்தி ரோடு, SRP மில் பஸ்ஸ்டாப் அருகில் உள்ள ஆதி கார்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற கம்பெனியில் RTO Staff ஆக பணி புரிந்து வருவதாகவும், மேற்படி கம்பெனியில் புதிதாக விற்பனை செய்யப்பட்ட 1) Maruthi Tour H2 Chasis no. MA3ETDE1S00660198 2) XL 6 Smart HYBRID ALPHA Chasis no.MA3CNC32SKH202764 3) Maruthi Shift LXI Chasis no. MBHCZC63SKH459852; 4) Tour S Diesel Chasis no.MA3FJEB1S00C21703; 5) Maruthi Shift LXI Chasis no. MBHCZC63SKH466799 6) MARUTHI EECO 5 SEATER WITH AC CHASIS No.

MA3ERLF1SOO732175 7) TOUR S DIESEL CHASIS No. MA3FJEB1S00C27629 8) MARUTHI ALTO LXI CHASIS No. MA3EUA61S00E67146 9) WAGON R VXI(O) AGS1.2L CHASIS No. MA3JMT81SKG194434 10) MARUTHI EECO 5 SEATER WITH AC CHASIS No. MA3ERLF1S00739775 11) MARUTHI ALTO LXI(O) CHASIS No.MA3EUA61S00E55168 12) BALENO DELTA PETROL CHASIS No.MBHEWB22SKH337495 ஆகிய கார்களின் புதிய பதிவு செய்வதற்கான ஆவணப் படிவங்கள் வைத்திருந்ததை கைபற்றப்பட்டது. மேலும் பணம் ரூ.1890/- அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. (9) மேலும் அங்கிருந்த திரு.கார்த்திகேயனை விசாரிக்க, தான் வானவராயர் ஓட்டுநர் பயிற்சி பள்ளியில் பயிற்சி ஓட்டுநராக பணிபுரிவதாகவும், அதன் பேரில் இந்த RTO-அலுவலகத்தில் பணிபுரிபவர்கள் அனைவரையும் தனக்கு தெரியும் என்றும் வழக்கமாக இரு சக்கர வாகனங்களுக்கு ஓட்டுநர் உரிமம் எடுக்க அரசு கட்டண தொகை ரூ.600/- என்றும், அது போக அதிகமாக ரூ.500/- தருவதும் மற்றும் நான்கு சக்கர ஓட்டுநர் உரிமம் எடுக்க அரசு கட்டண தொகை ரூ.1100/- என்றும் அது போக அதிகமாக ரூ.2000/- முதல் ரூ.3000/- வரை மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு வழக்கமாக தருவேன் என்றும், அதே போல 03.10.19 ஆம் தேதி அன்று 10-பயிற்சி ஓட்டுநர்களை அழைத்து வந்தும், அதன் பேரில் இன்று 10 புதிய ஓட்டுநர் உரிமங்களை பெறுவதற்காக வந்ததாகவும் சொன்னவரிடம் இருந்த பணம் ரூ.20/- மற்றும் தனது கையில் வைத்திருந்த பணம் ரூ.900/- கைப்பற்றப்பட்டது. மேலும் அவர் வசம் வைத்திருந்த 11 ஓட்டுநர் உரிமங்கள் கைப்பற்றப்பட்டது. மேலும் அவரது இருசக்கர வாகனம் TN 38 CE 2658 எண்ணுடைய TVS Jupiter-ல் பின்புற பாக்ஸில் சீட்டுக்கடியில் திறந்து பார்த்ததில் அதில் ஒரு கவரினுள் ரூ.15,500/- பணம் இருந்தது கைப்பற்றப்பட்டது. திரு.கார்த்திகேயன் அவரிடமிருந்து ஆக மொத்தம் ரூ.16,420/-யும், அவர் வைத்திருந்த 1)DL.No.TN382019000804810, 2) DL.No.TN3820190008061,3) DL.No TN3820190008049 4) DL.No.TN3820190008050, 5) DL.No.TN3820190008047 6) DL.No.TN3820190008046 7) DL.No.TN3820190008044

8) DL.No.TN3820190008042 9) DL.No.TN3820190008043 10) DL.No.TN3820190008045 11) DL.No.TN3820190007936 ஆகிய 11 ஓட்டுநர் உரிமங்களையும்

கைப்பற்றப்பட்டது. (10) திரு.P.தண்டபாணி என்பவரை விசாரிக்க தான் வடக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் கடந்த 5 வருடங்களாக புரோக்கராக செயல்பட்டு வருவதாகவும், தான் HP Cancel, பெயர் மாற்றம் மற்றும் தகுதி சான்று புதுப்பித்தல் (FC) செய்து தருவது போன்ற பணிகளை வடக்கு RTO அலுவலகத்தில் மேற்கொண்டு வருவதாகவும், HP Cancel செய்வதற்கு வடக்கு RTO அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணியாற்றி வரும் திரு.ஹரிராமசந்திரன் என்பவருக்கு ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் ரூ.50/- கொடுத்தால் தான் மேற்படி வேலையை செய்து கொடுப்பார் என்றும் பெயர் மாற்றம் செய்வதற்கு ஒவ்வொரு விண்ணபத்திற்கும் ரூ.100/- கொடுத்தால் தான் மேற்படி வேலையை செய்து கொடுப்பார் என்றும், 04.10.2019 அன்று TN 38 BS 8562 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்திற்கு Tax Clearance வாங்குவதற்காக திரு.ஹரிராமசந்திரன் என்பவரை பார்க்க வந்ததாக சொன்னார். மேலும் அவரிடம் இருந்த பணம் ரூ.500/-கைப்பற்றப்பட்டது. அதன் பின்னர் தரைத் தளத்திற்கு சென்றும் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் அலுவலக கட்டிடத்தில் மாலை வெளிப்பணி முடித்து 06.45மணிக்கு ஆஜரான இயக்கூர்தி ஆய்வாளர் நிலை 1 அதிகாரி (1) திரு.மா.சிவகுமார் என்பவர் அலுவலகத்திலிருந்தார். அவரிடம் இருந்த ரூ.460/-பணத்தை பற்றி கேட்க அவரது சொந்த பணம் என்று சொன்னதால் திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. இயக்கூர்தி ஆய்வாளர் திரு.கனகராஜ் அவர்கள் அலுவலகம் வராததால் மீண்டும் திரு.சிவக்குமார் அவர்களிடம் திரு.கனகராஜ் அவரிடம் பேச சொன்னதன் பேரில் தொடர்பு கொண்ட போது அவர் அழைப்பை எடுக்கவில்லை. (2) டேட்டா என்ட்ரி ஆப்பரேட்டர் திரு.சுரேந்திரன் என்பவரை விசாரிக்க தான் 18.01.2016 முதல் எல்3 இன்போ சொலியூசன் நிறுவனம் மூலம் பணிபுரிந்து வருவதாகவும், கணினியில் எல்எல்ஆர் பதிவு செய்வது, லைசென்ஸ் மற்றும் தகுதி சான்று விபரங்களை கணினியில் பதிவேற்றம் செய்வதுபோன்ற பணிகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார். அவரிடம் இருந்த பணம் பற்றி கேட்க சொந்த பணம் என்று சொன்னதால் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. (3)

திரு.ராதாகிருஷ்ணன் என்பவரை விசாரணை செய்ததில் தான் 24.08.2019ம் தேதி முதல் இயக்கூர்தி ஆய்வாளர்களுக்கு அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும், அவரை விசாரிக்க அவர் தன்னிடமிருந்த பணம் ரூ.500/-தனது சொந்த பணம் என்று சொன்னதால் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.(4) திரு.G.S ஆனந்த் என்பவரை விசாரிக்க தான் அந்த அலுவலகத்தில் 2013 டிசம்பர் முதல் இளநிலை உதவியாளராக பணி செய்து வருவதாகவும், 04.10.2019ஆம் அன்று அலுவலகத்திற்குள் வரும்போது ரூ.340/- கொண்டு வந்ததாகவும், அதனை தனிநபர் கையிருப்பு பணப்பதிவேட்டில் பதிவு செய்துள்ளதாகவும் தெரிவித்தார். அலுவலக பணியாளர்கள் தனி நபர் கையிருப்பு பதிவேட்டை பார்வையிட்டதில் மேற்படி அலுவலர் ரூ.340/- கொண்டு வந்துள்ளதாகதான் பதிவு செய்துள்ளார். அவரிடம் வைத்திருந்த பணம் பற்றி விசாரிக்க அவர் தனது மணிபர்சிலிருந்து கத்தையாக பணத்தை எடுத்து ஆஜர் செய்த பணம் ரூ.5045/- கைப்பற்றப்பட்டது. (5) மேலும் திருமதி. C.உமா, பி-பிரிவுக்குள் இருந்தவரை விசாரிக்க தான் இவ்வலுவலகத்தில் பி-3 பிரிவு உதவியாளராக 26.11.2018 முதல் பணி செய்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும் அவருடன் இருந்த M.ஆஷா, என்பவரை விசாரிக்க திருமதி.உமா தனது நெருங்கிய தோழி என்றும் இன்று அவரை பார்க்க வந்ததாகவும் தெரிவித்தார். புரோக்கர்கள் (1) திரு.பத்மநாபன் என்பவரை விசாரணை செய்ததில் தான் கோதை அண்ட் கோ மற்றும் குட் லீடிங் பைனான்ஸ் கோவை என்ற நிறுவனத்தில் ஆர்டிஓ லைசனிங் ஆபீசராக பணிபுரிந்து வருவதாகவும், அவரிடம் இருந்த பணம் பற்றி விசாரிக்க ரூ.3710/- எடுத்து ஆஜர் செய்தார். மேலும் அவரது பேண்டின் வலதுபுற பாக்கெட்டில் இருந்து ஒரு துண்டு சீட்டை எடுத்து ஆஜர் செய்தார். அதை பார்வையிட 16.09.2019 ஆட்டோ 2 -320, NCP 320, 17.09.2019 ஆட்டோ 2 - 320, 20.09.2019 1 ஆட்டோ -160, 2 NCP 640, 1HGV -550, சான்று 2310 என்றும் 23.09.2019 2 NCP 640, 24.09.2019 1EIB -1100, T மணி 1A/R 0160 25.09.2019 EIB -1100, 1 HGV -550, 5860 26.09.2019 3 AIR -480 27.09.2019 1AIR -160, 1 TTax -380, 6880 30.09.2019 1 NCP -320, T மணி 2 A/R -360, 7520, 7520-2310= 5210 என்று பென்சிலால்

எழுதப்பட்டிருந்தது. அதன் பின்பக்கத்தில் 23.09.2019 F.C என்று பேனாவால் எழுதப்பட்டிருந்தது. மேற்படி குறிப்புகள் பற்றி திரு.பத்மநாபனை விசாரிக்க எப்.சி பார்த்ததற்காக ஒரு ஆட்டோவுக்கு ரூ.160/-ம், NCP வண்டிக்கு வண்டி ஒன்றுக்கு ரூ.160/- என்றும், HGV ஒரு வண்டிக்கு ரூ.550/- என்றும் பள்ளி வாகனங்களுக்கு ரூ.1100/- கொடுக்க வேண்டும் என்றும் மேற்படி வாகனங்களை திரு.சிவகுமார் மற்றும் திரு.கனகராஜ், மோட்டார் வாகன ஆய்வாளர்கள் தகுதிசான்றுக்கு ஆய்வு செய்ததாகவும், கடந்த 5 நாட்களுக்கு முன்பு மேற்படி இரண்டு மோட்டார் வாகன ஆய்வாளருக்கும் கொடுப்பதற்காக வேண்டி இயக்கூர்தி அலுவலக உதவியாளர் திரு.ராதாகிருஷ்ணன் அவர்களிடம் ரூ.5210/-த்தை கொடுத்ததாக தெரிவித்தார். மேலும் மேற்படி துண்டு சீட்டில் பென்சிலால் தன் கைப்பட எழுதியதாக தெரிவித்தார். மேலும் T மணி என்று துண்டு சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள எழுத்துக்கு விளக்கம் கேட்க தனது நண்பர் தங்கமணி என்றும், அவருக்கு உடல்நிலை சரியில்லை என்பதால் அவர் சம்மந்தப்பட்ட வண்டிகளையும் தன்னையே பார்க்குமாறும் உரிய பணம் மற்றும் வாகனத்தை தன்னிடம் கொடுத்து அனுப்பியதாக தெரிவித்தார். தகுதி சான்று ஆய்வுக்கு பணம் கொடுத்தால் தான் உடனடியாக ஆய்வு செய்து சான்று கொடுப்பார்கள். இல்லையென்றால் இழுத்தடிப்பார்கள் என்று தெரிவித்தார். மேற்படி துண்டு சீட்டு திடீர் தணிக்கை குழுவினரால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவர் வைத்திருந்த 4 ஆர்.சி புத்தகங்களை பார்வையிட அதில் செல்வராஜ் என்பவரது TN38 AZ 1785 டூரிஸ்ட் டாக்ஸிக்கு இன்வர்டு ரினிவல் கட்டணம் செலுத்த வந்ததாகவும், பழனிச்சாமி என்பவரது TN38 CC 8739 ஆட்டோ ரிக்ஸாவிற்கு தகுதிசான்று புதுப்பிக்க வந்ததாகவும், ராஜ்குமார் என்பவரது TN38 AX 2635 ஆட்டோ ரிக்ஸாவிற்கு தகுதிசான்று புதுப்பிக்க வந்ததாகவும், கவுசல்யா என்பவரது TN38 AX 2635 டாடா ஏஸ்ற்கு தகுதிசான்று புதுப்பிக்க வந்ததாகவும் தெரிவித்தார். அவர் மோட்டார் வாகன ஆய்வாளர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருந்த பணம் ரூ.3710/- த்தை ஆய்வாளரால் கைப்பற்றப்பட்டது. (2) மேலும் திரு.பிரபு என்பவரை விசாரிக்க தான் விளாங்குறிச்சி ரோட்டில் உள்ள பன்னாரியம்மன் டிரான்ஸ்போர்ட்டில் பணிபுரிந்து வருவதாகவும், தன்னுடைய

அலுவலகத்தில் உள்ள வாகனங்களுக்கு தகுதி சான்றுகள் வாங்க இன்று 04.10.2019 வந்து மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.கனகராஜ் அவர்களை பார்க்க நின்றிருந்ததாகவும் தெரிவித்தார். அவர் கையில் ஆவணங்கள் இருந்த, ஆவணங்களை பார்வையிட TN38 BR 8546 என்ற குட்ஸ் கேரியர் வாகனத்திற்கும், TN37 AJ 0513 என்ற குட்ஸ் கேரியர் வாகனத்திற்கும், TN38 BV 4620 என்ற மேக்ஸி கேப் வாகனத்திற்கும், TN38 BY 4996 என்ற ஹெவி வாகனத்திற்கும், TN72 7594 என்ற குட்ஸ் கேரியர் வாகனத்திற்கும் இன்று ஆன்லைனில் கட்டணம் செலுத்திவிட்டு தகுதி சான்று ஆய்வுக்காக மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.கனகராஜ் அவர்களிடம் உட்படுத்தியதாகவும், வழக்கமாக எந்த மோட்டார் வாகன ஆய்வாளர் எப்.சி பார்க்கிறார்களோ அவர்கள் கேட்கும் தொகையை கொடுப்பது வழக்கம் என்றும், அதேபோல் இன்றும், தன்னுடைய சம்மந்தப்பட்ட வாகனங்களை திரு.கனகராஜ் பார்த்ததால் அவர் கேட்கும் பணத்தை கொடுப்பதற்காக காத்திருந்ததாக தெரிவித்தார். மேலும் பணம் பற்றி கேட்க ரூ.15,930/- மோட்டார் வாகன

ஆய்வாளர் திரு.கனகராஜ் என்பவருக்கு கொடுப்பதற்காக வைத்திருந்த பணம் என்பதால் கைப்பற்றப்பட்டது. மேற்கண்ட 5 வாகனங்களின் ஆன்லைன் தகுதி சான்று புதுப்பித்தல் கட்டண ரசீதுகள், சி.எப்.ஆர்.ஏ விண்ணப்பம், புகை சான்று நகல் மற்றும் இதர ஆவணங்கள் ஆகியவை மேற்கண்ட 5 வாகனங்களுக்கும் கைப்பற்றப்பட்டது. (3) திரு.ரவி என்பவரை விசாரிக்க தான் ஆர்.எஸ்.புரத்தில் உள்ள எஸ்.பி.பி. மோட்டார் பைனான்ஸ் என்ற நிறுவனத்தில் பணிபுரிந்து வருவதாகவும், வாகனங்களை நிறுவன பெயருக்கு மாற்றம் செய்யும் பணியையும் செய்து கொண்டு தகுதி சான்று பெற்று தருவதாகவும் தெரிவித்தார். அவரது கையில் கணேசன் பெயரில் உள்ள TN36 T 6536 Goods Carrier வாகனம், லதா பெயரில் உள்ள TN38 CB 8224 Goods Carrier வாகனம் மற்றும் எம்எம்.நடராஜன் பெயரில் உள்ள TN41 H 5482 Goods Carrier ஆகிய வாகனங்களை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சிவகுமார் அவர்கள் தகுதி சான்றுக்கு ஆய்வு செய்ததாகவும், மேற்படி ஆய்வாளரை பார்ப்பதற்காக அலுவலகம் வந்து காத்திருந்ததாகவும் தெரிவித்தார். மேலும் அவரிடம் பணம் பற்றி கேட்க ரூ.5910/-த்தை எடுத்து

ஆஜர் செய்தார். மேற்படி பணத்தை பற்றி விசாரிக்க வழக்கமாக எந்த மோட்டர் வாகன ஆய்வாளர் வாகனத்தை பார்கிறார்களோ அவர்கள் கேட்கும் தொகையை கொடுப்பது வழக்கம் என்றும், இன்று தன்னுடைய சம்மந்தப்பட்ட வாகனங்களை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சிவகுமார் பார்த்ததால் அவருக்கு கொடுப்பதற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். மேற்படி பணம் கைப்பற்றப்பட்டது. மேலும் ஆர்.சி புத்தகங்கள் 1)வெள்ளதுரை பெயரில் TN 57 D 0226 2) எம்.நடராஜன் பெயரில் TN 41 H 5482 3) எஸ்.அன்வர் சாதிக் பெயரில் TN 42 5258 4)சி.கோவிந்தராஜ் பெயரில் TN 72AL 7443 5) K.ரமேஷ் பெயரில் TN 738 AS 5898 6)P.நந்தகுமார் பெயரில் TN 37 By 9915 7) P.தாமோதரன் பெயரில் TN 43 F 5267 8)சோமலீலா பெயரில் TN 11B 7366 9)ஆர்.மணிகண்டன் பெயரில் TN 37 AC 9103 10) பி.கோபாலன் பெயரில் TN 37CE 9426 11) இ.தனலட்சுமி பெயரில் TN 66 E 4146 12) ஜி.முருகேசன் பெயரில் TN 39AB 1000 13) கௌரி பெயரில் TN 38AA 6572 14)A.விஜயன் பெயரில் TN 38 BR 0417 15) எஸ்.லதா பெயரில் TN 38 CB 8224 16)S.கணேசன் பெயரில் TN 36 T 6536 17)ஆர்.செல்வம் பெயரில் TN 37BE 4384 18) எம்.சலீம் பெயரில் TN 37 BU 6124 19) சந்திரசேகர் பெயரில் TN 37 8934 ஆகிய வாகனங்களின் அசல் ஆர்.சி புத்தகங்கள் கைப்பற்றப்பட்டது. பின்னர் இயக்கூர்தி ஆய்வாளர் அமரும் அறைக்கு கிழக்கு பக்கம் அமைந்துள்ள அறைக்கு செல்லப்பட்டது. அதில் Smart Card DL/RC அறைக்கு அருகில் உள்ள காத்திருப்பு அறையில் போடப்பட்டிருந்த இருக்கையில் திரு.ரவி, திரு.சண்முகசுந்தரம், திரு.பாபு, திரு.கணேசன் மற்றும் திரு.பரமசிவம் ஆகியார்கள் அமர்ந்திருந்தார்கள்,(4) திரு.S.ரவி அவர்களை விசாரிக்க தான் வாகனங்களுக்கு லைசென்ஸ் பெற்று தரும் புரோக்கர் தொழில் செய்து வருவதாகவும் பணம் பற்றி விசாரிக்க ரூ.1110/- இருந்ததை கைப்பற்றப்பட்டது. மேலும் அவரது இருசக்கர வாகனத்தில் இருந்த பணம் ரூ.2300/- கைப்பற்றப்பட்டது. மேலும் TN 37BJ 9456, TN 02 AK0595, TN38CK4550, TN 38CK 5846, TN 37AQ5825, ஆகிய ஐந்து வாகனங்களின் அசல் ஆர்.சி. புத்தகங்கள் கைப்பற்றப்பட்டது. மேலும் (5) திரு.N.பாபு என்பரை விசாரிக்க

தான் புரோக்கர் தொழில் செய்து வருவதாக தெரிவித்தார். மேலும் அவரிடமிருந்து பணம் ரூ.4,260/- கைப்பற்றப்பட்டது. (6)பின்னர் திரு.P.கணேசன் என்பவரை விசாரிக்க தான் புரோக்கர் தொழில் செய்து வருவதாக தெரிவித்தார். அவரிடமிருந்து பணம் ரூ.1230/-கைப்பற்றப்பட்டது. மேலும் பார்வையிட TN 38 CA 5997, TN 38 BU 9808, TN 38 TQ 9650, TN 38 CQ 8041ஆகிய நான்கு வாகனங்களின் அசல் ஆர்.சி புத்தகங்களையும் கைப்பற்றப்பட்டது. (7) திரு.R.சண்முகசுந்தரம் என்பவரை விசாரிக்க புரோக்கர் தொழில் செய்து வருவதாகவும் தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் ரூ.7690/-கைப்பற்றப்பட்டது. (8) R.தேவராஜன் என்பவரை விசாரிக்க புரோக்கர் தொழில் செய்து வருவதாகவும் தெரிவித்தார். அவரிடமிருந்து கத்தைகளாக பணம் ரூ.18,500/-ம், ரூ.2150/- ம், ரூ.180/- ஆக மொத்தம் 3 கத்தைகளிலும் சேர்த்து ரூ.20,830/- இருந்தது கைப்பற்றப்பட்டது. மேலும் TN 38H 1362, TN 38 Y 4519, TN37 BM 4244, TN 39 AH 5326, TN 38 BV 4123, TN38 CH 4631, ஆகிய ஆறு வாகனங்களின் அசல் ஆர்.சி. ஐ.டி.கார்டுகள் மற்றும் TN 38 H 1362, TN 38CH 4631, TN 39 AH 5326 , TN 38 BV 4123, TN 38 Y 4519 ஆகிய நான்கு வாகனங்களின் ஜெராக்ஸ் ஆர்.சி. ஐ.டி.கார்டுகள் இருந்தது. மேலும் அவரிடம் TN 38 19960006053, TN 38 19950001458 ஆகிய இரண்டு அசல் ஓட்டுனர் உரிமம் ஆகியவைகள் கைப்பற்றப்பட்டது. அவரது இருசக்கர வாகனத்தில் வைத்திருந்த பணம் ரூ.22,000/-ம் கைப்பற்றப்பட்டது. (9) திரு.P.பரமசிவம் என்பவரை விசாரிக்க ஓட்டுநர் பயிற்சி பள்ளியில் பயிற்சி ஓட்டுநராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். மேலும் அவரிடமிருந்த பணம் ரூ.7250/- திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அந்த அலுவலகத்தில் மாடிப்படிக்கு கீழே பார்வையிட்ட போது Sri Kumaran தங்கமாளிகை என்று எழுதப்பட்ட மணிபர்ஸ் காணப்பட்டது. அதனுள்ளே கத்தையாக பணம் ரூ.2,430/-இருந்தது. மேற்படி பணம் மற்றும் மணி பர்ஸ் ஆகியவை கைப்பற்றப்பட்டது. மேலும் அந்த அறையில் SRI VARI FASHIONS என்ற பெயர் கொண்ட பாலித்தீன் கவர் மற்றும் WOLF TUNA என்ற பெயர் கொண்ட சோல்டர் பேக் காணப்பட்டது. அந்த கவர் மற்றும் பேக் ஆகியவற்றை

பார்வையிட்டபோது அதில் RTO அலுவலகம் சம்மந்தப்பட்ட ஆவணங்கள் காணப்பட்டது. ஆவணங்கள் ஐந்து கட்டுகளில் இருந்தது கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி அலுவலகத்தில் இருந்த 1) அலுவலக பணியாளர்கள் தனி நபர் கையிருப்பு பதிவேடு, 2) தின சரி வருகை பதிவேடு ஆகியவை கைப்பற்றப்பட்டது. அந்த அலுவலகத்தில் இருந்த அலுவலர்களை விசாரித்தபோது கடந்த ஒரு வருடமாக ஓட்டுனர் உரிமம், வரி கட்டுதல், தற்காலிக அனுமதி சீட்டு போன்ற அனைத்து பணிகளுக்கும் வடக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் பணம் செலுத்த முடியாது என்றும், அது சம்பந்தமான பணத்தை அலுவலகத்தின் வெளியே ஆன் லைன் மூலம் மட்டுமே பணம் செலுத்த வேண்டும் என்றும் தெரியவந்தது. எனவே இவ்வலுவலகத்தில் இருந்த தனி நபர்கள் வடக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு செலுத்த பணம் கொண்டுவந்ததாக சொல்வது முன்னுக்குப் பின் முரனாக உள்ளது என்பது தெளிவாகிறது. இந்த திடீர் தணிக்கையின் போது கணக்கில் வராத மற்றும் யாரும் உரிமைகோராத பணம் ரூ.2,00,715/- கைப்பற்றப்பட்டது. எனவே, மேற்கண்ட முறைகேடுகளில் தொடர்புடையவர்களாக தெரியவரும் கோவை வடக்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பணிபுரியும் 1) திரு.M.சிவக்குமார், மோட்டார் வாகன ஆய்வாளர், வடக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், துடியலூர், கோவை. 2) திரு. கனகராஜ், மோட்டார் வாகன ஆய்வாளர், வடக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், துடியலூர், கோவை. 3) திரு.ஹரி ராமச்சந்திரன், கண்காணிப்பாளர், வடக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், துடியலூர், கோவை, 4) திரு.G.S.ஆனந்த் இளநிலை உதவியாளர், வடக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், துடியலூர், கோவை. 5) திரு.N.ராதாகிருஷ்ணன், அலுவலக உதவியாளர், வடக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், துடியலூர், கோவை மற்றும் அவ்வலுவலகத்தில் புரோக்கர்களாக செயல்பட்டு வந்த 6) திரு. ஜெயபால், த/பெ. நாகப்பன், கதவு எண் 13, முத்துநகர், துடியலூர், கோயம்புத்தூர், 7) திரு. பழனிசாமி, த/பெ மாணிக்கம், எண் 3/2, பாரதி நகர், சிங்காநல்லூர், கோயம்புத்தூர், 8) திரு.ராம்குமார், த/பெ கணேசன் H 11, IUDP Colony செல்வபுரம் கோயம்புத்தூர், 9) திரு.H.நவாஸ்கான், த/பெ.ஹக்கீம், கதவு எண்

3/61, பள்ளி வீதி, கரும்புக்கடை, கோயம்புத்தூர், 10) திரு.கண்ணன், த/பெ.நைனார், கதவு எண் 7/13, பாலாஜி நகர், அருவாசெட்டிபுதூர், கொண்டயம்பாளையம், கோவை, 11) திரு.v.ராஜா, த/பெ.வெங்கடேசன், கதவு எண் 6/44, கணபதி நகர், கணபதி, கோவை, 12) திரு. G.ரவிக்குமார், த/பெ.கோவிந்தன், கதவு எண் 10/35, விஸ்வேஸ்வரய்யா வீதி, 2-சர்ச் ரோடு, கோயம்புத்தூர்-38, 13) திரு.G.விவேக், க.எண்.40/71, குமாரசாமி கவுண்டர் தெரு, ரத்தினபுரி, கோயம்புத்தூர், 14) திரு.கார்த்திகேயன் வயது-38, த/பெ. பெருமாள், க.எண் 1/23, கக்கன்ஜி வீதி, மணியகாரன்பாளையம், கோயம்புத்தூர், 15) திரு.P.தண்டபாணி, த/பெ. பழனிச்சாமி, கதவு எண் 36, குட்டியப்பன் வீதி, ரத்தினபுரி, கோயம்புத்தூர், 16) திரு.பத்மநாபன், த/பெ.வி.சீனிவாசலு, 24ஏ, பெரியசாமி லே அவுட், ரத்தினபுரி, கோவை, 17) திரு.பிரபு, த/பெ.குப்புசாமி, கதவு எண்.6 முருகன் காலனி. டீவிஎஸ் நகர் இடையர்பாளையம் கோவை, 18) திரு.ரவி, த/பெ.ராமசாமி, 9, பெரியார் நகர் இடையர்பாளையம், குனியமுத்தூர், கோவை, 19) திரு. S.ரவி, த/பெ சிவலிங்கம் பி.என் புதூர் நேதாஜி ரோடு, சீரநாயக்கன்பாளையம்புதூர், கோவை, 20) திரு.N.பாபு, த/பெ நடராஜ், 3/412 பழைய போஸ்ட் ஆபீஸ் வீதி, கே.வடமதுரை, கோவை, 21) திரு.P.கணேசன், த/பெ பழனிசாமி, 36, பயனியர்மில் ரோடு, விளாங்குறிச்சி, பீளமேடு, கோவை, 22) திரு.R.சண்முகசுந்தரம் த/பெ ராமசாமி, க.எண்.9, சங்கரலிங்கனார் ரோடு, மணியகாரம்பாளையம், கோவை மற்றும் 23) திரு.U.R.தேவராஜன், த/பெ ராமசாமி, க.எண்.5/1079 மேற்கு வீதி, எல்லபாளையம், பொகலூர் வழி, கோவை 24) திரு.P.பரமசிவம், S/o.சொக்கலிங்கம், எண் 183, சாஸ்திரி ரோடு ராம் நகர், கோயம்புத்தூர் ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இணைப்பு: 1) நடவடிக்கை குறிப்பு, 2) கைப்பற்றப்பட்ட பணம் ரூ.2,00,715/-, 3) பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள், 4) கைப்பற்றப்பட்ட ஆவணங்கள். (Sdxxxxx) மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கோயமுத்தூர். Sir, received the complaint on 05.10.2019 at 17.00hrs and registered a case in Coimbatore V & AC Cr.No.19/2019/AC/CB

u/s 7(a),7(A) of PC Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 and 102 Cr.P.C. (Sdxxxxxx) J.Prabudass, Inspector of Police, V&AC, Coimbatore. இதன் முதல் தகவல்அறிக்கை, அசல் புகார், நடவடிக்கைகள் மற்றும் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் ஆகியவைகளை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டன.

(ஜீ. பிரபுதாஸ்)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.